# <u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

## <u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2018–ம் ஆண்டு ஜுன் மாதம் 29 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை :– திரு. எஸ்.மகாராஜன்
தனி அலுவலர்
நெல்லிக்குப்பம் நகராட்சி

**<u>மன்றபொருள். 1.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கே.எஸ்.ஏ.ஆர். பி.ஏ.எச்.ரோடு, அருங்குணம் சாலை, பண்ருட்டி–கடலூா் சாலை, மற்றும் முக்கிய சாலைகளில் அரசியல் கட்சிகள், முக்கிய பிரமுகா்கள், திருமணங்களின் பேனா்கள் போன்றவை அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ளதால், அவற்றை தனியாா் நிறுவனம் மூலம் வீடியோ கவரேஜ் மற்றும் போட்டோ மாவட்டஆட்சியா் கடலூா் அவா்களின் அறிவுரை வழங்கியதின் பேரில் சாலைகளில் உள்ள
விளம்பரங்களை படம் பிடித்துக் கொடுக்க தனியாா் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியலை மன்றத்தின் பாா்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | வேலையின் பெயா் | தனியாா் நிறுவனங்களின் பெயா் | விலைப்புள்ளித் தொகை |
|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக் குட்பட்ட பகுதிகளில் சாலைகளில் உள்ள அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள விளம்பர பேனா்களை வீடியோ மற்றும் போட்டோ படம் பிடித்துகொடுக்கவும் | ஸ்ரீ ஆசை ஸ்டுடியோ& வீடியோ, 264/549 கே.எஸ்.ஏ.ஆா்.ரோடு நெல்லிக்குப்பம் | 6000/– |
| 2 | | பிரபு போட்டோ ஸ்டுடியோ & டிஜிட்டல் வீடியோஸ், 481 காந்தி ரோடு, பண்ருட்டி | 7500/– |
| 3 | | ஸ்ரீ லட்சுமி ஸ்டுடியோ & வீடியோ, 30/1, சித்தன்குடி சாலை,பாண்டிச்சேரி | 9000/– |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

(1) தீா்மான எண்.88 நாள்.12.04.2018ல் மன்றம் அனுமதி அளித்துள்ளது
(2) வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள வ.எண்.1 ஸ்ரீ ஆசை ஸ்டுடியோ& வீடியோ, நெல்லிக்குப்பம் என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
(3) தனி அலுவலா் அவா்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்.

**(<u>ந.க.எண்.1362/2018/எப்1</u>)**

**தீா்மான எண் : 132 அலுவலக குறிப்பினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள். 2</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவிற்கு மழைகாலம் கருதியும், முன் எச்சரிக்கை நடவடிக்கைகளுக்கும் மற்றும் பொது கழிவறைகளை சுத்தம் செய்யவும் அத்தியாவசியமாக 2018–19ம் ஆண்டிற்கு கீழ் கண்டுள்ள விவரப்படி பொருட்கள் தேவையாக உள்ளது.

1. பிளீச்சிங் பவுடா் – 2000 கிலோ கிராம்
2. நீா்த்த சுண்ணாம்பு – 2000கிலோ கிராம்
3. EMM NO-1SOLUTION -- 100 லிட்டா்

மேற்கண்ட பொருட்கள் திருச்சி, தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழில் கூட்டுறவு சங்கத்தில் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3,00,000/– நகராட்சி 14–வது நிதிக்குழு நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றப் பொருள் வைக்கலாம்.

அலுவலகக் குறிப்பு: 1.மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்

ந.க.எண். 2598/2018/எச்1

**தீர்மான எண் : 133 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதி மற்றும் அங்கீகரிக்கப்பட்டது .**

**மன்றபொருள். 3.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வண்டி எண். TN-31 AH 6642 TATA ACE வாகனம் 28.06.2018 முதல் தகுதி சான்று (FC) பெற வேண்டியுள்ளதால், அதிலுள்ள பழுதுகளை நீக்கி தகுதி சான்று பெறுவதற்காகும் தோராய செலவினம் ரூ.50,000/–ம் மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1.அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசரம் கருதி முன் அனுமதி வழங்கி ஒப்பந்தபுள்ளி கோரியதை அங்கீகரிக்கலாம் .

கோப்பு எண். 2691 /2018/எச்1

**தீர்மான எண் : 134 அலுவலக குறிப்பினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது .**

**மன்றபொருள். 4.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான பி.ஏ.எச் சாலையில் உள்ள தினசரி மார்க்கெட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள தரை கடை எண் . 1 முதல் 10 வரை ஆகிய பத்து கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி 20.06.2018 அன்று கோரப்பட்டதில் கடை எண்ஒ. 1க்கு மட்டும் கீழ்கண்ட நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி எழுப்பியதை மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கு வைக்கப்படுகிறது .

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | உயர்த்தப்பட்ட மறு ஏல பொது ஏலக் கேள்வி ரூ. |
|---|---|---|
| 1 | திரு. என்.ஏ.முஜ்ஜிமில்<br>397 , கே.எஸ்.ஏ.ஆர் ரோடு<br>நெல்லிக்குப்பம் | 700/– |
| 2 | திரு. எச்.நஜிர் அகமது<br>த/பெ. னீபா<br>397 , கே.எஸ்.ஏ.ஆர் ரோடு<br>நெல்லிக்குப்பம் | 750/– |

அலுவலக குறிப்பு : வரிசை எண் . 2ல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர் கடை எண் 1க்கு உயர்ந்த பட்ச ஏலக்கெள்வி கேட்ட தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.468/2006/அ1)

**தீர்மான எண் : 135 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள். 5..** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சோழவல்லி கிராமம் வார்டு–B, பிளாக்–30 டவுன் சர்வே எண்– 25/2 பரப்பு 5.35 ஏக்கர் அல்லது 23304.60 சதுரடி பரப்பளவு கொண்ட மனை அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவாகும். இம்மனைப் பிரிவு பெயர் நிலா நகர் ஆகும். இம்மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் அவர்களின் கொ.ஒ.ம.வ / ந.ஊ.உ.இ. (வி.ம.) எண் 178/2018

என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் உள்ள சாலைகள், பூங்கா பரப்பளவு 7598.50 சதுரடி இடத்தினை மனைப்பிரிவு உரிமையாளர் தானமாக ரூ.100/– முத்திரை தாளில் பதிவு செய்து வழங்க கோரியும், இம்மனைப்பிரிவினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–B, பிளாக்–30, T.S.No – 25/2, பரப்பு 5.35 ஏக்கர் இடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக உருவாக்கப்பட்டு மனைகள் 100 விற்கப்பட்டும் மீதம் 83 மனைகள் விற்கப்படாமலும் உள்ளது. இந்த அனுமதியற்ற நிலா நகர் மனைப் பிரிவினை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் கொ.ஒ.ம.வ / ந.ஊ.உ.இ. (வி.ம.) எண் 178/2018 என தெரிவிக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது. இம்மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்கா I,II,III பரப்பளவு : 3947.25 + 3651.25 =7598.50 சதுரடி இடத்தினை ரூ.100/– முத்திரை தாளில் தானமாகப் பெற்றுக் கொள்ளலாம். தானமாக பெற்றுக் கொண்ட மனுதாரர் மனைப்பிரிவு / மனைகளுக்கு அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1882 / 2018/எப்1

**தீர்மான எண் : 136 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள். 6.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு TN-31/AE–5944 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொண்டதற்கு Jothi Diesel Pump Engineering , No .14 Industrial Estate , Semmandalam , கடலூர் அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ. 28000/. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - மன்றம் பதிவு செய்யலாம்
(ந.க.எண்.2371/2018/இ1)

**தீர்மான எண் : 137 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.7..</u>**நெல்லிக்குப்பம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு TN-31/AE–5944 வாகனத்தின் நான்கு டயர்களும் தேய்ந்து விட்ட படியால் அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட மகேந்திரா டீலர் SR CAR CARE , சிதம்பரம் அவர்களிடம் மாற்றுவதற்கு தோராயமாக ரூ. 38000/– ஆகும் . செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : - மன்றம் அனுமதிக்கலாம் .
(ந.க.எண்.2120/2018/இ1)

**தீர்மான எண் : 138 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள். 8.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி தனலட்சுமி நகரில் உள்ள பூங்காவில் Micro Composting Centre அமைக்க ரூ . 2.40 லட்சம் மதிப்பீட்டில் நகர மன்ற தீர்மான எண் . 85 நாள் . 12.04.2018 ல் அனுமதி வழங்கப்பட்டது . இதன் படி ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு பணி மேற்கொள்ளும் போது அப் பகுதி மக்கள் ஆட்சேபனை தெரிவித்து பணி செய்யவிடாமல் ல்டுத்துவிட்டனர் . எனவே மேற்படி பணியை இந்நகரில் அருகில் உள்ள நர்மதா நகர் பூங்காவில் மேற்படி பணியை குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.M.செந்தாமரைக்கண்ணன் ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி சதவீதத்தில் பணி செய்து முடித்ததை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.
<u>கோப்பு எண்.2019/2018/எச்1</u>

**தீர்மான எண் : 139 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள். 9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஸ்ரீமகாலட்சுமி நகர்விரிவு, குடிதாங்கி கிராமம், வார்டு–C, பிளாக் – 2, நகரளவு எண் 14/1,14/2,14/3,14/5A 1.98 ஏக்கர் அல்லது 86248.80 சதுரடி பரப்பளவு கொண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ.(வி.ம) எண். 274/2018 என எண்ணிடப்பட்டு 88 மனைகளுக்கு நிபந்தனைகளுடன் ஒப்புதல் செய்து இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–C, பிளாக் – 2, நகரளவு எண் 14/1,14/2,14/3,14/5A 1.98 ஏக்கர் அல்லது 86248.80 சதுரடி இடத்தில் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவினை, அரசாணை எண் 78,172 படி வீட்டுவசதித்துறை 4.5.2017 மற்றும் 13.10.2017ன்படி கொள்கையளவில் குடியிருப்பு மனைப்பிரிவு கொ.ஒ.ம.வ. /ந.ஊ.உ.இ.(வி.ம) எண் 274/2018ன் படி தொழில் நுட்ப ஒப்புதல் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு இயக்கம் விழுப்புரம் மண்டலம் ந.க.எண்.799/2018 வி.ம. நாள்25.04.2018ல் தொழில் நுட்ப ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் 88 மனைகள் மொத்தம் உள்ளன. பொது சாலைகள் மற்றும் பூங்கா I பரப்பு 1233.75 சதுரடி பூங்காவிற்கு மனை எண் 88 என வரைபடத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. சாலை, பூங்கா இடத்தினை ரூ.100/–முத்திரை தாளில் தானமாக பெற மன்றம் அனுமதிக்கலாம். பின்னர் இம்மனைப் பிரிவில் கோரும் நபர்களுக்கு மனை வரன்முறை செய்து தரலாம்.

(ந.க.எண். 2166/2018/எப்1)

**தீர்மான எண் : 140 . அலுவலக குறிப்பினை ஏற்று இம் மனைப்பிரிவில் உள்ள பூங்கா மற்றும் சாலைப்பகுதிகளை இந்நகராட்சிக்கு தானமாக பெற அனுமதிக்கப்பட்டது . மேலும் இம் மனைப்பிரிவில் உள்ள மனைகளை வரன்முறை செய்திட கோரும் நபர்களின் மனைகளை நிபந்தனைகளின் படி வரன்முறை செய்திடவும் அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள். 10..</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஸ்ரீமகாலட்சுமி நகர், குடிதாங்கி கிராமம், வார்டு–C, பிளாக் – 2, நகரளவு எண் 10/2,10/5, 11, 14/4, 14/5pt. 6.11 ஏக்கர் (அ) 266151.60 சதுரடி பரப்பளவு கொண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ.(வி.ம) எண்.349/2018 என எண்ணிடப்பட்டு 190 மனைகளுக்கு நிபந்தனைகளுடன் ஒப்புதல் செய்து இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு–C, பிளாக் – 2, நகரளவு எண் 10/2, 10/5, 11, 14/4, 14/5pt. 6.11 ஏக்கர் (அ) 266151.60 சதுரடி இடத்தில் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவினை, அரசாணை எண் 78,172 படி வீட்டுவசதித்துறை 4.5.2017 மற்றும் 13.10.2017ன்படி கொள்கையளவில் குடியிருப்பு மனைப்பிரிவு கொ.ஒ.ம.வ. /ந.ஊ.உ.இ.(வி.ம) எண் 349/2018ன் படி தொழில் நுட்ப ஒப்புதல் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு இயக்கம் விழுப்புரம் மண்டலம் ந.க.எண்.796/2018 வி.ம. நாள் 10.05.2018ல் தொழில் நுட்ப ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் 190 மனைகள் மொத்தம் உள்ளன. பொது சாலைகள் மற்றும் பூங்கா I, II பரப்பு 10021.00சதுரடி (6290 சதுரடி + 3731 சதுரடி) இடத்தினை ரூ.100/–முத்திரை தாளில் தானமாக பெற மன்றம் அனுமதிக்கலாம். பின்னர் இம்மனைப் பிரிவில் கோரும் நபர்களுக்கு மனை வரன்முறை செய்து தரலாம்.

(ந.க.எண். 2167/2018/எப்1)

**தீர்மான எண் : 141 . அலுவலக குறிப்பினை ஏற்று இம் மனைப்பிரிவில் உள்ள பொதுச்சாலைகள் மற்றும் பூங்காக்களை நகராட்சிக்கு தானமாக பெற அனுமதிக்கப்பட்டது . மேலும் இம் மனைப்பிரிவில் உள்ள மனைகளை வரன்முறை செய்திட கோரும் நபர்களின் மனைகளை நிபந்தனைகளின் படி வரன்முறை செய்திடவும் அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள். 11.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 118, நாள் 18.05.2018ன்படி 22.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வான்பாக்கம் கஸ்டம்ஸ் சாலையில் இருந்து வான்பாக்கம் சாலையில் இரண்டு பக்கங்களில் ரோடு மார்க்கிங் செய்தல் மற்றும் இரண்டு புறங்களில் செம்மண் கொண்டு ரோடு பேக்கிங் செய்தல் பணி | 1.85 | 1. திரு. R .**கணபதி** | **0.13%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | 2 NSK Constructions | 8.97% மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :–</u> 1.வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.13 %** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . திரு. R .**கணபதி** ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(ந.க.எண் .2614/2018/இ1)**

**தீர்மான எண் : 142 . அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. R .கணபதி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது .**

**மன்றபொருள். 12.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாடு திட்டம் (TURIP) 2018–2019 – ன் கீழ் அரசு மானியம் பெற்று மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ள சாலைகளை ரூபாய் 300.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க 2018–19ம் ஆண்டின் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட அனுமதி குழு நாள் . 12.05.2018ன் படி கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கியுள்ளது .

(ரூ.கோடியில்)

| மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| **3.00** | **1.14** | **0.90** | **0.66** | **0.30** |

மேற்படி பணிக்கு . சென்னை , நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண் . 12981/2018/இ1 நாள் . 27.06.2018 ன் படி நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளதால் கீழ் கண்ட படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடிற்கும் , ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | சிப்பம் எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 | திருக்கண்டேஸ்வரம் மெயின் ரோடு , திருக்கண்டேஸ்வரம் மெயின் ரோடு மற்றும் சுடுகாட்டு சாலை , தனலட்சுமி நகர் மற்றும் ரைஸ்மில் சாலை , நர்மதா நகர் மெயின் ரோடு , விஸ்வநாதபுரம் வான்பாக்கம் இணைப்பு சாலை , வார்டு . 7 காமராஜ் நகர் சாலை , வாழப்பட்டு திரௌபதி அம்மன் கோயில் தெரு , சரவணபுரம் வாழப்பட்டு இணைப்பு சாலை , பாபா நகர் , தமிழ் கருமார தெரு , தேவநாதன் நகர் 4வது குறுக்கு தெரு மற்றும் மாருதி நகர் விரிவாக்கம் குறுக்கு தெருவில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 7,9,14,15,16 மற்றும் 24 ) | 210.00 |
| 2 | 2 | வான்பாக்கம் சானர் தோப்பு , வாழப்பட்டு அருணாச்சலம் தெரு , மேட்டு தெரு , சோழவல்லி குறுக்கு மெ்யின் ரோட்டில் 1வது , 2வது மற்றும் 3வது குறுக்கு தெரு , மோரை மேட்டுத் தெருவில் விடுபட்ட பகுதி , வார்டு . 25 காமராஜ் நகர் மெயின் ரோடு மற்றும் கல்கி நகரில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி . (வார்டு எண். 2,12,15,20 , 24 மற்றும் 25 ) | 90.00 |

அலுவலககுறிப்பு:- . மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண் . 2022/2018/இ1)

**தீர்மான எண் : 143 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள். 13..</u>** இந்நகராட்சி ஆரோக்கியசாமி தெருவில் உள்ள உரங்கிடங்களில் பல ஆண்டுகாலமாக சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை AICON Surveys பாண்டிச்சேரி என்ற நிறுவனத்தின் மூலம் TOPOGRAPHICAL Survey செய்யப்பட்டு உரங்கிடங்கில் சேகரிக்கப்பட்டுள்ள அனைத்து குப்பைகளையும் பிரித்து உயர் சுரங்க (BIO MINING) முறை மூலம் அகற்றி நிலத்தை கையகப்படுத்தி மறு சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.74.00 லட்சத்திற்கும், மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கான நடவடிக்கை எடுத்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு : ம</u>ன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.891/2017/இ1)

**தீர்மான எண் : 144 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்
நெல்லிக்குப்பம் நகராட்சி